**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Kamban's Hanuman

**Maheswariveerappan [1*], Dr. Peri. Azhagammai [2],**
[1]Part-time Ph.D. Research Scholar, Ref.No.16781/Ph.D.K8/Tamil/Part Time,
Department of Tamil, Ganesar College of Arts and Science, Melasivapuri.
[2]Research Guide, Assistant Professor, Department of Tamil,
Ganesar College of Arts and Science, Melasivapuri,
Email: alagmmaiphd@gmail.com, Tel: 997607214
*Corresponding Author Email: mahevadivel@gmail.com. Tel: 9655062961

**Article Info**
Received on 21-April-2026, Revised on 22-April-2026, Accepted on 27-April-2026, Published on 01-May-2026

**Abstract:** The Kambaramayanam holds a place of pride, adorning the forefront of unparalleled literary works in Tamil. It is magnificent, brimming with both literary excellence and devotional fervor. A unique distinction of Kamban lies in how he integrates diverse characters throughout the epic to enhance its grandeur. He provides them with situations and actions tailored to their nature and merit, revealing their character traits through both the poet's own narrative and the dialogue of other characters. In this regard, this article is structured to describe Hanuman, who stands out as a supreme creation in character portrayal. Beyond his celebrated role as the quintessential emissary, Hanuman is depicted by Kamban as a flawless blend of intellectual brilliance, linguistic mastery, and unwavering humility. This study meticulously analyzes the critical episodes where Hanuman's astute diplomacy and moral fortitude shift the trajectory of the epic. By examining the subtle nuances in his dialogues and actions, the article explores how Kamban elevates Hanuman from a loyal warrior to an embodiment of divine wisdom. Ultimately, this research highlights how the characterization of Hanuman serves as a foundational pillar for the epic's overarching spiritual and ethical narrative.

**Keywords**; *Kamban, Hanuman, Messenger of Rama (Rama Dhootan), Exemplary Thinker (Sinthanaichemmal), Master of Words (Sollin Selvan), Prowess in Warfare.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* *E-ISSN 2456-5148*
Volume 6 | Issue 01, May 2026 Online: www.ngmtamil.in

# கம்பரின்அனுமன்

[1]**மகேஸ்வரிவீரப்பன்,** பகுதிநேர முனைவர் பட்டஆய்வாளர், Ref.No.16781/Ph.D.K8/Tamil/Part Time, தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச் சிவபுரி.

[2]**முனைவர் பெரி. அழகம்மை,** நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச் சிவபுரி.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழில் விளங்கும் தன்னிகரற்ற இலக்கியப்படைப்புகளின் முன்வரிசையை அணிசெய்யும் பெருமையுடையது கம்பராமாயணம். தமிழ்ச்சுவையும், பக்திச்சுவையும் நிறைந்து விளங்கும் மாண்புடையது. காப்பியச் சிறப்பனை மிகுவிக்கும் பல்வகைப் பாத்திரங்களைக் காப்பியமெங்கும் பொருத்தி அவற்றின் இயல்புக்கும் தகுதிக்கும் ஏற்பச் சூழலும் செயலும் அளித்துக் கவிக்கூற்றிலும் பிறபாத்திரக்கூற்றிலும் பண்புவிளக்கம் தருவது கம்பரின் தனிச்சிறப்பாகும். அவ்வகையில் பாத்திரப்படைப்பில் மிகச் சிறந்த பாத்திரமாக அமையும் அனுமனை விவரிக்கும் வகையில் இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்**

கம்பர், அனுமன், இராமதூதன், சிந்தனைச்செம்மல், **சொல்லின்செல்வன், போர்த்திறம்**

**முன்னுரை**

காப்பியத்தில் பாத்திரங்கள் கருத்துக்களை வெளியிடும் வாயில்களாக உள்ளன. கதைஇ பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் ஆகிய இவை மூன்றும் காப்பியத்திற்குச் செறிவும் உரமும் ஊட்டும் முதன்மையான கூறுகளாகும். இம்மூன்றனுள் படைக்கப்படும் பாத்திரங்கள் காப்பியச் சிறப்பனை மிகுவிக்கும். பொலிவும் சுவையும் உள்ளத்தைக் கவரும் தன்மையும் நல்குவனவாகும். அவ்வகையில் உயிரோட்டமுள்ள பாத்திரமாக கம்பராமாயணத்தில் அனுமன் பாத்திரப் படைப்பு அமைகின்றது. அனுமன் சிறப்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அனுமன்**

இராமகாதையில் வரும் கதைமாந்தர்களுள் ஈடும் இணையும் அற்றவன் அனுமான். அஞ்சனை மைந்தன். வாயுவின் புதல்வன். ஐம்புலன் வென்றவன். இல்லறம் துறந்தவன். தொண்டுநெறியில் நின்றவன். இராம சுக்ரீவன் நட்பை உருவாக்கியவன். இராமனுக்கு அடிமைத்தொழில் செய்தவன். சிறந்த பக்திக்கு உரியவன். கடல் கடந்து சீதையைக் கண்டவன். அறிவு, ஆற்றல், தூய்மை, வாய்மை ஆகியவற்றை வடிவாகக் கொண்டவன் என்பன போன்ற பல பெருமைகளுக்கு உரியவன் அனுமான். இப்பெருமை வாய்ந்த அனுமனைத் தன்கவிக்கு நாயகன் என்று கூறி உள்ளம் களிக்கிறார் கம்பர்.

**செவிக்குத்தேனெனஇராகவன்
புகழினைத்திருத்தும்
கவிக்குநாயகன் (ஊர்தேடு படலம் – 132)**

இராமனது புகழ் கேட்பவர் செவிகளுக்கு இனிமைதரும்; தேனாக இனிக்கும். இராமனது புகழைத் தனது செவிகளுக்குத் தேனாகக் கொள்ளும் கவிக்கு நாயகன் என்று கம்பனால் போற்றப்பெறும் மாருதி மாருதேயன் என்றும் அழைக்கப்படுவான். இராமனது திருவடி தன்மீது பட அப்பெருமானை இராமாவதாரத்தில் தாங்கியதனால் அநுமனுக்குச் சிறிய திருவடி எனப் பெயர் வழங்குவது வைணவமரபு. காற்றின்சேய் (206), காலின்மாமதலை (3752), அஞ்சனைக்கு ஒரு சிறுவன் (3754), தன் பெருங்குணத்தால் தன்னைத்தான் அலது ஒப்பு இலாதான் (3759) , செவ்வழி உள்ளத்தான்(3764), சொல்லின் செல்வன் (3768), மெய்ம்மையின் வேலிபோல்வான் (3775), பாழிஅம் தடந்தோள் வென்றி மாருதி (3780), தருமத்தின் தனிமை தீர்ப்பான் (3781), நல்அறிவாளன் (4808), பெரியகோள் அரி (4822), சாகாவரத் தலைவரில் திலகம்அன்னான்(4824), இராகவன்தூதன் (4887), தூண் ஆம்என்னும் தோள் உடையான்(4909), எண்ணம் பிழையாதான் (4922), பழி இல்லான் (4923), யாரும், யாவையும், எல்லா உலகத்தும், தொழும் தாள்வீரன்(4926) , அறிவன் (4931) தேவருக்கு அமுதம் ஈந்த குன்று என, அயோத்தி வேந்தன் புகழ் என, குவவு தோளான் (4934), கருங்கடல் கடந்த தாளான் (4935) என்று சொல்லாட்சி வாயிலாக அனுமன் செயல்களுடன் பிணைத்து ஒப்பற்ற ஒருவன் அனுமன் என்பதைக் காட்டுகிறார் கம்பர்.

**சுந்தரகாண்டம்**

சுந்தரம் என்பது அனுமன் பெயர்களில் ஒன்றாகக் கொண்டு அவன் செயல் விரித்தலின் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெற்றது என்பர் சான்றோர். . சுந்தர காண்டம் கடல்தாவு படலத்தில் தொடங்கித் திருவடி தொழுத படலத்தில் முடிகின்றது. அனுமன் ஆற்றலைத் தெரிவிக்கும் இப்படலம் அவனுடைய பணிவு, பக்தி, அன்பு, வீரம் ஆகிய சிறந்த அகப்பண்புகளையும் ஆங்காங்கே புலப்படுத்திச் செல்கின்றது. இராமன்மீது அவன்கொண்ட பக்தி உறுதிப்பாட்டையும், அறத்தின் தூதனாக அவன்செல்லும் பான்மையையும் ஆசிரியர் ஆங்காங்கே சுட்டிக்காட்டி அமைத்திருப்பதும் இக்காண்டத்திற்கு மிகவும் பொருத்தமாக அமைகின்றது. "இராம காதையில் முதல் மூன்று காண்டங்களில் இடம்பெறாமல் - கிஷ்கிந்தை சுந்தரம் யுத்தம் ஆகிய பின் மூன்று காண்டங்களில் மட்டும் இடம்பெறும் அனுமன் கம்பன் படைப்பு முறையில் உலகக் காப்பியங்களில் வேறு யாரையும் ஈடு சொல்லமுடியாத சிறப்பைப் பெற்று தனி ஒருவனாக நிற்கின்றான்"[1] என்பர். தொண்டின் உறைவிடமாகவும், தன்னை இழந்த பக்திக்கு ஒரு முழு வடிவமாகவும் உள்ள அனுமன் காண்டம் முழுவதும் விசுவரூபம் கொண்டு விளங்குகிறான். அனுமனைக் கம்பர் எடுத்த எடுப்பில்,

"தன்பெருங் குணத்தால் தன்னைத் தானலாது ஒப்பிலாதான்" .

(அனுமப் படலம் – 2)

என்று பாராட்டுவதைக் கண்டு மகிழலாம். முதன் முதலில் இராமலக்குமணர் அனுமனைச் சந்தித்துப் பேச்சுக் கொடுத்த சிறிது நேரத்திலேயே, இராமன்.

**"ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்னும்**

**வேற்றுமை இவனோடு இல்லை.** ( அனுமப் படலம் – 11)

என்று அனுமனின் செம்மைக் குணத்தை வெளிப்படுதியமை குறிக்கத்தக்கது. இவன் 'கல்லாத கலையும் வேதக்கடலுமே இல்லை' (3768) என்றும் 'உலகுக்கெல்லாம் ஆணி' (3769) என்றும், 'நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும், கோட்படாப் பதமே ஐய! குரக்கு உருக்கொண்டது' (3783) என்றும் இராமனால் போற்றப்பட்டு அனுமனை ஏற்றம் பெற வைக்கிறார்.

**திருமாலின் அவதாரமாக அனுமன்**

திருமாலின் அவதாரங்கள் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி எனப் பத்தாகக் கருதப்படுகின்றது. கம்பனில் இராமன் திருமாலின் அவதாரமாக அமைவதால் மூலமான திருமால் மட்டுமின்றி கண்ணன், நரசிம்மன், வாமனன், வராகம் போன்ற அவனது பிற அவதாரங்களையும் உவமையாகக் காட்டிச் சிறப்பிக்கின்றான். காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அனுமன் பண்பிலும், செயலிலும், பயனிலும், திருமாலின் அவதாரங்களைப் பல இடங்களில் உவமையாக்கிக் கம்பர் அடையாளப்படுத்துகிறார். அனுமனை மக்கள் திருமால் எனக்கூறுவதாக அமைத்துள்ளார்.

**வேண்டு உருவம் கொண்டுஎழுந்து,**

**விளையாடுகின்றான், மெய்வேதம் நான்கும்**

**தீண்டு உருவன் அல்லாத திருமாலே இவன்'என்றார்,**

(மருத்துமலைப்படலம் 38),

விரும்பிய உருவந்தாங்கி விளையாடுகின்றவனாகிய இவன் உண்மையான வேதங்கள் நான்கும் எட்டுதற்குரிய வடிவினன் அல்லாத திருமாலே' என்று, கூறுவதாகக் காட்சிப்படுத்துகின்றார்.

உலகனைத்தையும் வயிற்றில் அடக்கிய இறைவனின் பேருருவைத் தூது சென்று மீண்டுவரும் அனுமனில் காணுகின்ற பொழுதும் கண்ணன் அவதார நிகழ்வைக் குறிப்பிடுகின்றான். அனுமனை ஆதிவராக மூர்த்தியாக" அன்று உலகு எயிற்றிடை கொள் ஏனம் எனல் ஆனான்" (5436) எனச் சுட்டிக்காட்டி, புகை நுழையா இடத்திலும் புகுந்து புறப்படும் அனுமனின் ஆற்றலைக்,"கொண்டது ஓர் உருவம் மாயோன் குறளினும் குறுக நின்றான்" (5052) எனஅனுமனைக்

காட்டி மகிழும் கம்பனின் மனநிலையை உயர்த்துணர முடிகின்றது. கடல்தாவி இலங்கையை அடையத் தயாராகும் நிலையை,

**"பொருஅரு வேலைதாவும் புந்தியான் புவனம் தாய**

**பெருவடி உயர்ந்த மாயோன் மேக்குஉறப் பெயர்ந்ததான்போல்**

**உருஅறி வடிவின் உம்பர் ஓங்கினன் உவமையாலும்**

**திருவடி என்னும் தன்மையாவர்க்கும் தெரிய நின்றான்" (4736)**

என வாமனின் பேருருவம் போன்று அனுமனைப் படைக்கின்றார். இங்கு இறைவனின் முழு உருவ நிலையின்றி வானளந்த சேவடி கட்டப்படுகின்றது. திருமாலின் திருவடியாகப் போற்றப்படும் அனுமனின் வழிப்பாட்டு நிலையையும் இங்கு நினைவுபடுத்துகின்றார்.

அனுமன், அக்ககுமாரனை அழித்த பொழுதும், அகம்பனுடன் போர்செய்யும் சூழலிலும் நரசிம்மமாகப் படைக்கப்படுகின்றான். வாளையும் வேலையும் கொண்டு போர் செய்யாது நகத்தையும் கரத்தையும் மட்டுமே துணையாகக் கொண்டு பகைவரை அழிக்கும் அனுமன் நரசிம்மமாக விளங்குகின்றான்.

**"தாருடன் குருதிஅன்ன குருதியில் தனிமாச்சீயம்**

**கூர்உகிர் இளைத்த கொற்றக் கனகன் மெய்க்குழம்பின் தோன்ற" (5782)**

என அனுமனை நரசிம்மமாகக் காணுகின்றான். இராமன் இலக்குவனிடம் அனுமனைப் பாராட்டிப் பேசும் இடத்தில் சிவனுக்கு இணையானவன் என வியந்து போற்றுகின்றார். இதனை,

**"இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன்இசைகள்கூரக்**

**…….. ……….. ………… ………**

**வில்லார்தோள் இளையவீர! விரிஞ்சனோ? விடைவில்லானோ" (3768)**

என்ற பாடலால் அறியலாம்.

**இராமதூதன்**

கம்பராமாயணத்தில் அனுமன் சென்ற தூது மிக முக்கியமானதாகும். அனுமனின் தூது காப்பிய நோக்கம் நிறைவேற துணையாக இருந்தது எனலாம். அனுமன் என்ற பெயரைச் சொன்னாலே 'இராமதூதன்' என்ற கருத்து எழும். 'இவன் விண்ணில் எழுந்து செல்வதற்குக் காரணம் என்ன' என்று உமையவள்கேட்க, சிவன்,

**என், இவன் எழுந்ததன்மை?" என்று, உலகு ஈன்றாள் கேட்ப**

**'மன்னவன் இராமன்தூதன் மருந்தின்மேல் வந்தான்;.( 8880)**

.இராமனது தூதன் ஆகிய இவன் மருந்தைக் கொண்டு போக வந்திருக்கின்றான். என்றுகூறி இராமதூதன் தூதனான அனுமனைக் காட்டுகிறார்.

சுயம்பிரபையிடம் அனுமன் வானரவீரர்களை அறிமுகப்படுத்தும்போது 'ஏதமில் அறத்துறை நிறுத்திய இராமன், தூதவர்'" (கிட்கிந்தைபிலம்புக்கு – 53) என்றும், இராவணன் முன்பு வில்லின் தூதன் என்றும் கூறுவதாகக் கம்பர் காட்டுவார். சீதை அசோகவனத்தில் இறக்க முற்பட்ட நிலையில் அவள் முன் தோன்றி இராமதூதன் நான் என்று அனுமன் கூறித்தொழுது விலக்கினான்.

**கண்டனன் அனுமனும்: கருத்தும் எண்ணினான்**
**கொண்டனள் துணுக்கம் :மெய்தீண்டக் கூசுவான்**
**அண்டர் நாயகன் அருள்தூதன் யான் !'எனாத்,**
**தொண்டை வாய்மயிலினைத் தொழுது தோன்றினான்.**

(உருக்காட்டுபடலம் 23)

இராமன் அயோத்திக்குத் திரும்புகையில், இராமன் பரத்துவாச முனிவரின் விருந்தினனாக தங்கினபோதும் அனுமன் மூலம் தான் திரும்பிய செய்தியைப் பரதனுக்கு அனுப்புகின்றான். நெருப்பில்விழும் நிலையிலிருந்த பரதனிடம் இராமன் வருகையைத் தெரிவித்தமையைக் கவிஞன்,

**ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்**
**மெய்யின் மெய்யனை நின்னுயிர் வீட்டினால் உய்யு**
**உய்ய மேயவன் என்றுரைத்து உட்புகாக்**
**கையினால் எரியைக் கரி ஆக்கினான்.** **(மீட்சிப் படலம் 240)**

எனப் பரதன் உயிரைக் காத்த செயலைப் புலப்படுத்துதுகிறார். இராம தூதனாக இவ்வண்ணம் அனுமனின் செயலாற்றல் மிகப் பெரிதாக இக் காவியத்தில் அமைகிறது. விலங்கினின்றும் “மனிதன் அடைய வேண்டிய நிலை தெய்வ நிலையாகும். இதனைக் கம்பர் அனுமன் வாயிலாக வலியுறுத்துகின்றார் என்ற கருத்து பொருத்தமுடையதாகும்”[2].

**சிந்தனைச்செம்மல்**

செயல்களின் ஊற்றுக்கண் சிந்தனை. எல்லாச் செயல்களுக்கும் சிந்தனையே அச்சாணியாக அமைகிறது. காப்பியத்தில் அனுமனின் பலம் அவனின் சிந்தனையின் அடிப்படையில் அமைகிறது.அனுமனின் சொல்லும் செயலும் அவன் சிந்தனையால் விளைந்த விளைவே ஆகும். எண்ணம் இது என்பதை ஊகித் தறியும். துணுக்கம் கொண்டவன்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவோம் என்பது இழுக்கு**[3]

என்பார் வள்ளுவர். “பெண்ணை ஒதுக்கி வாழ்ந்தவன் பெண்ணைத் தேடும் பணியில் அமர்ந்தான். இது ஒரு புதுமையாய் இருந்தது”[4] என்பர். இக்கூற்றிற்கேற்ப சீதையை இலங்கைநகர் முழுதும் தேடிக்கொண்டு வருகின்றான். கும்பகர்ணன், வீடணன், இந்திரசித்து, மண்டோதரி, இராவணன் முதலியவர்களைக் காணும்போது, அனுமன் நமக்கு ஒரு சிந்தனைச் செம்மலாகக்காட்சித்

தருகின்றான். உறங்கும் நிலையில் இந்திரசித்தனை முதன் முதலில் அனுமன் சந்திக்கிறான். சந்தித்த முதற்பார்வையிலேயே இந்திரசித்தனுடைய பேராற்றல் அனுமனுக்குப் புரிந்துவிடுகிறது.

**இளைய வீரனும், ஏந்தலும், இருவரும் பலநாள்**
**உளைய உள்ளபோர் இவனொடும் உளது...** **(ஊர்தேடு படலம் -14.)**

என்று எண்ணுகிறான்.

இளவல் இலக்குவனுக்கும், இந்திரசித்தனுக்கும் பல நாள் கடும் போர் நடக்கும் என்பதை முன்கூட்டியே கணித்து விடுகிறான் அறிஞன் அனுமன்.

**'தருமமும், தகவும், இவர் தனம் எனும் தகையர்." (அனுமப்படலம்-8).**

எனவும் "கோபமில்லாதவர், கருணைக் கடல் போன்றவர், நன்மையே அறிந்தோர், இந்திரனும் அஞ்சும் தோற்றமுள்ளவர். அறக்கடவுளும் அஞ்சும் நல்லொழுக்க நேர்மையுடையவர்கள்; கூற்றவனும் அஞ்சும் வலிமையுள்ளோர்" என இராம இலக்குவரைக் காணும்போது அனுமன் எண்ணுகிறான். இத்திறம் அனுமனின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுகிறது.

போர்க்களத்தில் அனுமனின் செயல்பாடுகளில் ஒன்று மருந்து மலை கொண்டு வருதல். ஆகும். பல இடங்களைக் கடந்து இறுதியில் மருத்துமலையை அடைகின்றான். அதனை வேருடன் பெயர்த்தெடுத்துக் கையிலேந்திக்கொண்டு விரைந்து திரும்புகின்றான்

**இங்குநின்று இன்னன மருந்தென்று எண்ணினால்**
**சிங்குமால் காலம்என்று உணர்ந்த சிந்தையான்**
**அங்கது வேரொடும் அங்கை தாங்கினான்**
**பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான்.** (மருத்துமலைப் படலம் 63)

என அனுமன் இ டம் காலம் அறிந்து சிந்தித்துச் செயலாற்றும் நிலையைக் கம்பர் காட்டுகிறார்.

**சொல்லின்செல்வன்**

சொற்களை அறிவுடனும், பொருளால் ஆழத்துடனும், அழகாகவும், ஆக்கப்பூவமாகவும் பயன்படுத்துபவர்கள் சொல்லாற்றல் மிக்கவர்கள் எனலாம். எதை எவ்விடத்தில் எப்படிச் சொல்லலாம் என்பதில் சொல்லாற்றலின் மேன்மை அடங்கியுள்ளது. அறிவுக்கும், கற்பனைக்கும், சொல்லுக்கும் கடந்து நிற்கும் ஒரு பொருளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு துல்லியமான முறையில் அப்பொருளின் தன்மையை, சொல்லும் திறனை கவிச்சக்கரவர்த்தி கம்பர் அனுமனை வைத்துப் புலப்படுத்துகிறார்.

அனுமன் இராமனால் 'சொல்லின் செல்வன்' எனப் பாராட்டப்பட்டவன்.

**கல்லாதகலையும், வேதக்**

**கடலுமே" என்னும் காட்சி**

**சொல்லாலே தோன்றிற்று அன்றே?**

**யார்கொல் இச்சொல்லின் செல்வன்?**

(அனுமப் படலம் – 20)

என்று இராமனே சொல்லின் செல்வன் என்ற பட்டத்தை வழங்குவதாக அமைத்துக்காட்டி அனுமனுக்கு மகுடம் சூட்டுகிறார் கம்பர். இராம இலக்குவர்களை முதன் முதலில் சந்திக்க ஒரு மாணவ உருவம் கொண்டு வருகின்றான். முதலில் சந்திக்கும் போதே, நுட்ப அறிவினனாகிய அனுமன், இருவரையும் நெருங்கி,

**"கவ்வை யின்றாக நுங்கள் வரவு"?** (அனுமப் படலம் – 27)

என்று அடக்கத்துடன் வரவேற்கின்றான். வருகின்ற அவர்கள்முன் உங்கள் வருகையால் துன்பம் இல்லாமல் போகட்டும் என்கின்றான். இவர்கள் வருகையால் யாருடைய துன்பம் எந்தத் துன்பம் போக வேண்டும் என்ற கேள்வி எழலாம். இதற்கு, "இராம இலக்குவர்களது துன்பம் சுக்கிரீவன் நட்பால் இல்லாமல் போகவேண்டும். தன் அண்ணன் வாலியால் சுக்கிரீவன் அடைந்திருக்கும் துன்பம் இராமன் நட்பால் இல்லாமல் போகவேண்டும். இதனை அடுத்து அனுமன் கொண்டுள்ள பிறவித்துன்பம் போகவேண்டும். அனுமன் பிறவித் துன்பம் பிற்பாடு இராமன் தன்னையே இவனுக்குத் தந்ததால் போகிறது. இத்தகைய சதுரப்பாடுடைய அனுமனது வரவேற்பு வாசகம்"[5] என்கிறார் தியாகராசன். இதில் கல்வியறிவும், ஆற்றலும், அடக்கமும் என்ற கலை அழகோடு அனுமன் கூற்றும் நயம்பட அமைக்கப்பட்டுள்ளது.

இராமன் கட்டளையால் இலங்கை வந்து சீதையைக் கண்ட அனுமன், மீண்டு சென்று இராமனை அடைந்து தென்திசை நோக்கி பேசாமலேயே சீதை இருக்கும் திசையை வணங்கி அவளது கற்பை உணர்த்தும் திறனும் சிறப்புடையதாகக் காட்டப் பெற்றுள்ளது சீதையை இராமனுக்குக் காட்சிப்படுத்துமிடத்து, **"கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால் தென்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்" (6031),** என்றும் **"இற்பிறப்பு என்பது ஒன்றும் இறும்பொறை என்பது ஒன்றும் கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம்புரியக் கண்டேன்" (6035)** என்றும் சீதையைக் கண்டுவந்து சொல்லும் முறை இராமனுக்கு உயிர்அளித்து உணர்வூட்டிய சொற்களாக அமைகின்றன. கம்பர் சொற்களைத் தேர்ந்தெடுத்து கையாண்டு அனுமனைச் சொல்லின் செல்வன் என்ற பட்டத்திற்கு உரியவராக்குகிறார்.

**போர்த்திறம்**

“ஒருவன் தோள்வலியே சிறந்தவலி. கம்பர் பல இடங்களில் அனுமனின் தோள்களை அதன் வலி புலப்படுமாறு வருணிக்கின்றார் என்றும் வயிரத்தின்தோள் தடந்தோள் திண்தோள் அலங்கல் அம் தடந்தோள் பாழி நெடுந்தோள் என்றும் வருணிக்கப்பட்டுள்ளது”[6].

சீதையைக் கண்டு மீளும்போது அனுமன் இலங்கையில் பொழிலை அழித்ததால் பிடிக்க வந்த படைத்தலைவர் ஐவரைக் கொன்றான். இலங்கையில் அனுமன் பலரோடு போர்புரிந்து மீண்டான். முதலில் கிங்கரர்களை அழித்தான். சம்புமாலியை அழித்தான். இலங்கையில் அனுமன் வந்தவுடன் அவனுடன் போர்செய்து தோற்ற இலங்கையின் காவல் தெய்வம் இலங்காதேவி இலங்கையை விட்டு நீங்கினாள்.

**ஈடுபட்டவர் எண்ணிலர் தோரணத்தெழுவால்**
**பாடுபட்டவர் படு கடல் மணலினும் பலரால்**
**சூடுபட்டது தொல் நகர் அடு புலி துரந்த**
**ஆடுபட்டது பட்டனர் அனுமனால் அரக்கர்**

( இலங்கை கேள்விப் படலம் 59)

அசோகவனத்துத்தில் அனுமனால் வலிமை இழந்த அரக்கர்கள் எண்ணில்லாதவர்கள், அந்த அனுமன் ஏந்திய எழுவால் தாக்குண்டு அழிந்த அரக்கர்கள் கடல் மணலைவிடப் பலர்.அனு மனின் வலிமையைக் கண்டு அஞ்சிய அரக்கர் கொல்கின்ற புலியினாலே துரத்தப்பட்ட ஆடுகள் அடைந்த துன்பத் தையே அடைந்தார்கள். பழமையான இலங்கை நகரம் அனுமனால் எரிந்தது.

போரில் இராமன், இலக்குவன் ஆகியவர்கட்கு அநுமன் வாகனமாக அமைதல் முதற்போரில் இராமனை நடந்து செல்லுவதைத் தவிர்த்துத் தன்னை வாகனமாக்கிக் கொள்ளுமாறு வேண்ட அதற்கு இராமனும் ஒருப்படு கின்றான்.

**நன்று நன்று எனா நாயகன் ஏறினன் நாமக்**
**குன்றின்மேல் இவர் கோள் அரியேறு எனக்கூடி**
**அன்று வானவர் ஆசிகள் இயம்பினர் ஈன்ற**
**கன்று தாங்கிய தாய் என மாருதி களித்தான்.**

**(முதற் போர்புரி படலம் - 214)**

என அனுமனின் வேண்டுகோளுக்கிணங்க இராமன் தோளின்மேல் ஏறி போர்புரிந்தான்.

.அனுமன் போர்க்களத்தில் இராவணனைக் குத்துகின்றான். இராவணன் தடுமாறி கண்களில் தீயைக் கக்கினான்.மூளைகள் தயிர்போல் சிந்தின தலைகள். அனைத்தும் நிறக மாட்டாமல் சுழன்றன. திக்கு யானைகளை வெற்றிக் கொண்டிருந்த புகழ் முதகின் வழியே வெளியேறியது

**அயிர் உக்கன நெடுமால் வரை இனலுக்கன விழிகள்**

**தயிர் உக்கன முழு மூளைகள் தலை உக்கன தரியா**

**உயிர் உக்கன நிருதக் குலம் உயர் வானரம் எவையும்**

**மயிர் உக்கன எயிறு உக்கன மழை உக்கன வானம்**

**(முதற் போர்புரி படலம்** - 173)

என்று அனுமனின் வீரச்சிறப்புகள் போராற்றலுடன் விளக்கப்பட்டுள்ளன.

**தொண்டுநெறி**

இராமனுக்குப் பெருந்தொண்டு ஆற்றியவன் அனுமன் இராமனின் பக்தனாகவும், தொண்டனாகவும் காப்பியத்தில் மிளிர்கிறான். அனுமன் தொண்டின் சிறப்பே காப்பியப் பெருமையாக அமைகிறது. அனுமப் புகழும் தொண்டின்வழியே போற்றப்படுகிறது. அனுமனுடைய தொண்டு தனியான ஒன்றாகும்." 'நான்' என்ற அகங்காரத்தையும், 'எனது' என்ற மமகாரத்தையும் அறவே போக்கியவன் அனுமன் ஆவான்"[7] எனப்பதிவு செய்கிறார் ஞானசம்பந்தன். அவன் செய்த செயல்கள் மற்றவர்களால் செய்வதற்கு அரியன. அவன் இல்லை யென்றால். சீதை இருந்த இடமும் தேடிக்கண்டுபிடிக்க இயலாமல் போயிருக்கும்.

தனக்கென வாழாமல் பிறருக்காகவே வாழ்த சமூகம் தமிழ்ச் சமூகம். இந்நெறியில் நின்றவன் அனுமன். ".மனம் மொழி மெய்மைகளால் நற்செயல் புரிதலே அறம். உலகநலம் பேணும் எண்ணம், செயல், சொல் அறம்.எனப்படும்"[8]. இவ்வறவழியில் நின்று தொண்டாற்றியவன் அனுமன். நன்னெறி மூலம் அடையப்படும் பெருமை இவ்வுலகத்திலுள்ள ஐம்பூதங்களிடம் உள்ளதா இல்லை அனுமனிடம் உள்ளதா என்று கம்பர்,

**செவ் வழிப் பெருமை என்று உரைக்கும் செம்மைதான்**

**வெவ் வழிப் பூதம் ஓர் ஐந்தின் மேலதோ**

**அவ் வழித்து அன்று எனின் அனுமன் பாலதோ**

**எவ் வழித்து ஆகும் என்று எண்ணும் ஈட்டதே.**

(சுந்தர காண்டம் உருக் காட்டு படலம் - 99 )

என்று வியந்து பேசுகின்றார்.

**உதவிக்குக் கிடைத்த உயர்பரிசு**

அனுமன் இராமன், சீதை இருவராலும் என்றும் அழியாதிருக்கும் வரம் பெற்றவன். அனுமன் சீதையைக் கண்டுபிடித்ததோடு மருத்துமலை கொண்டுவந்து போர்க்களத்தில் பிரமாத்திரத்தால் வீழ்ந்த இலக்குவனை உயிர்பெற்று எழச்செய்தான்.

**இன்று விகிலாது, எவரும் எம்மொடு**

**நின்று வாழுமா நெடிது நல்கினாய்;**

**ஒன்றும் இன்னல்நோய் உறுகி லாது,நீ**

**என்றும் வாழ்தியால் இனிது,என் ஏவலால்!"**

(மருத்து மலைப் படலம்)

நெடிதுகாலம் நின்று வாழுமாறு மருத்து மலை யைக் கொணர்ந்து நல்கி எல்லோர் உறவையும் மீட்டதால் எனவே, சிறிதும் துன்பநோய் அடையாது என்றும் இனிது வாழ்வாயாக என இராமன் வாழ்த்தினான். இராமன் கூறிய இவ்வாழ்த்தோடு ,

பாழிய பணைத்தோள் வீர துணை இலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே யான் மறுஇலா மனத்தேன் என்னின்
ஊழி ஒர் பகலாய் ஒதும் யாண்டு எலாம் உலகம் ஏழும்
ஏழும்வீவுற்றஞான்றும்இன்றுஎனஇருத்திஎன்றாள்

(உருக்காட்டுப்படலம் – 71)

இராம தூதானாய் வந்து உயிரைக் காத்ததால் என்றும் சிரஞ்சீவியாக வாழ்க எனச் சீதையும் வாழ்த்துகிறாள்.

அயோத்தியில் இராமனுக்கு முடிசூட்டுவிழா மிக்கச் சிறப்போடு நடந்தேறியது. ஒவ்வொருவராக விடைபெற்றுத் தங்கள் ஊருக்குத் திரும்பினர். இராமன் அவர்களுக்கு வரிசை அறிந்து பரிசில் பொருள்கள் நல்கினான். அனுமன் விடைபெற்றுச் செல்ல வந்தான். "அனுமனுக்கு எல்லாவற்றினும் மேலான இந்த அணைப்பினைத் தருகிறேன்" என்று கூறினான். அவனை அணைத்து மகிழ்ந்தான்.

**மாருதி தன்னை ஐயன்**

**மகிழ்ந்(து) இனி(து) அருளின்நோக்கி,**

**ஆர்உதவிடுதற் (கு) ஒத்தார்**

**நீஅலால் ! அன்றுசெய்த**

**பேர்உதவிக்(கு ) யான்செய்**

**செயல்பிறி(து) இல்லை; பைம்பூண்**

**போர் உதவியதின் தோளாய்!**

**பொருந்துறப் புல்லு(க) என்றான்** (விடைகொடுத்த படலம் 20)

“அணைத்துக் கொள்பவன், அணைக்கப்படுபவனைக் காட்டிலும் பெரியவனாக இருப்பான். பெரியவன் சிறியவனை அணைத்துக்கொள்வதே முறைமை. அதற்கேற்ப இராமன் தன்னை அனுமன் தழுவிக்கொள்ளுமாறு தந்து அனுமனை உயர்த்தித் தன்னைத் தாழ்த்திக் கொண்டான். “கைம்மாறு கருதாச் செயலுக்கு இல்லை என்று காட்டும் வகையில் தன்னைத் தழுவிக்கொள்ளுமாறு இராமன்

சொல்வது மிகச்சிறப்பாக அமைகிறது"[9]. இவ்வாறு பேருதவிபுரிந்த அவனுக்கு இராமன் தன்மகிழ்ச்சியைக் காட்டும் வகையில் அவனைக் கட்டித்தழுவும் நிகழ்ச்சி காட்டப்பெற்றுள்ளது.

"கம்பர் அனுமனை குறைகளே அற்றவனாகப் படைத்துள்ளான். இராமனிடம் ஆழ்ந்த பக்தி கொண்டோர் பலர். அவர்கள் அனைவரையும் வென்று இராம பக்தியில் ஈடு இணையற்று விளங்குகிறான். எனவேதான் இராமனும் இறுதியில் தன்னையே அவற்குத் தருகிறான். 'அரியணை அனுமன் தாங்கும்' பேறு பெற்று என்றும் வாழும் சிரஞ்சீவியாக அவன் இயங்குகிறான்"[10] என்ற கூற்றும் நினைவுகூறத்தக்கது.

அனுமன் செய்த தொண்டுகள் அளப்பரியவை. ஆற்றல் வாய்ந்தவை எனக்காட்டும் கம்பர் செய்த உதவிக்கு நன்றி உடையவர்களாகவும் திகழவேண்டும் என்பதையும் அனுமன் கூற்றாகவே கம்பர் பதிவு செய்கிறார்.

சிதைவு அகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவி அந் தணரை ஆவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம்
மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்கொன் றேனும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?
( கிட்கிந்தைப் படலம்-62)

தாய், தந்தை, ஆசான், குழவிக்கொலை, பெண்கொலை என்னும் கொடும்பாதகங்கட்கெல்லாம் கழுவாய் உண்டு; செய்ந்நன்றி மறத்தலுக்கு அது இல்லை என்று அனுமன் பேசுகின்றார். என்றும் நன்றி உணர்வோடு நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

செருக்குச் சிறிதுமின்றி ஒரு தொண்டனாக வாழ்கிறான் என்றால், அவனைப் படைப்பதன் மூலம் தொண்டு என்ற பண்பிற்கே ஒரு வடிவம் தந்துவிடுகிறான் கம்பர் என்பதை அறியமுடிகிறது. சுக்கிரீவன் உயிர்வாழ்வதற்கும் இராமன் உதவியை நாடுவதற்கும் அவன்மூலமாகத் தாரத்தோடு தலைமையும் பெறுவதற்கும் காரணமாக இருந்தவன் அனுமன் ஒருவனே ஆவான். இராமனின் மனைமீட்சிக்கு அனுமன் சிறந்த தூதனாக அமைகின்றான். அவனுடைய உருவம், வேகம், வலிமை, செயலூக்கம், சிந்தனை ஆறற்றல், இடம் காலமறிந்து செயல்படும் திறம், சொல்லாற்றல் ஆகிய அரிய குணங்களோடும், அறவுணர்ச்சியோடு அறவழியிலேயே அவன் செயலாற்றினமையும் கம்பர்காட்டிச் செல்வது அறிந்து நுகர்ந்து இன்புறத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. அ.ச. ஞானசம்பந்தன், இராமன் பன்முகநோக்கில். ப.321.
2. ச . சிவகாமி, அனுமன் ஆய்வும் வழிபாடும், ஆய்வுக்கட்டுரை, ப.4.
3. குறள்: 467.
4. ரா. சீனிவாசன் , கம்பராமாயணம், ப.234.
5. சாமி. தியாகராசன், கம்பன் என்றொரு மானிடன் சாமி, ப..27.
6. ச . சிவகாமி, அனுமன் ஆய்வும் வழிபாடும், ஆய்வுக்கட்டுரை, ப.2.
7. அ.ச. ஞானசம்பந்தன். கம்பன் எடுத்த முத்துகள், ப.18 .
8. ச. ஈஸ்வரன் ,ஆய்வும்திறனாய்வும், ப. 96.
9. தெ.ஞானசுந்தரம். காப்பியவிருந்து, ப,62.
10. இரா. வ. கமலக்கண்ணன், உலகப் பெருங் கவிஞர் கம்பர், , ப.246.

**துணைநூற் பட்டியல்**

[1]. ஈஸ்வரன். ச, ஆய்வும் திறனாய்வும், பாவைபிரிண்டர்ஸ், சென்னை, முதல்பதிப்பு – 2007.

[2]. ஞானசம்பந்தன் அ.ச. இராமன் பன்முகநோக்கில், கங்கை புத்தக நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2002.

[3]. ஞானசுந்தரம்.தெ, காப்பியவிருந்து, உலகத் தமிழ்கல்வி இயக்கம், சென்னை, முதல்பதிப்பு - 1986.

[4]. ஞானமூர்த்தி. தா.ஏ, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, முதல்பதிப்பு -1996.

[5]. கம்பர், கம்பராமாயணம், சுந்தரகாண்டம் முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு, அண்ணாமலைநகர் - 02, மூன்றாம்பதிப்பு 2010.

[6]. இரா. வ. கமலக்கண்ணன். இரா. வ., உலகப் பெருங் கவிஞர் கம்பர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு - 1988.

[7]. சிவகாமி. ச, அனுமன் ஆய்வும் வழிபாடும், ஆய்வுக்கட்டுரை, நாகர்கோவில், முதற்பதிப்பு - 1974.

[8]. சீனிவாசன். ரா. , கம்பராமாயணம், அணியகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2000.

[9]. சுப்புரெட்டியார். ந, அண்ணல்அனுமன், ஏஷியன் பிரிண்டர்ஸ் சென்னை, முதல் பதிப்பு 2003.

[10]. தியாகராசன். சாமி கம்பன் என்றொரு மானிடன் பாரதி தேசியப் பேரவை கும்பகோணம் முதல் பதிப்பு – 2004.

[11]. ஜகந்நாதன் கி.வா. , அழியா அழகு, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு – 1978.